பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 04 சனிக்கிழமை 20.11.2021 கதிர் 243

## 2 ஆண்கள் படுகொலை!

### சந்தேகநபர்களுக்கு வலைவீச்சு

இருவேறு இடங்களில் ஆண்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை, தெனியாய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறிமல்தெனிய வத்த

☞2

# அரசிலிருந்து வெளியேற சு.க. தயார்!

## அமைச்சர் மஹிந்த அமரவீர அதிரடி அறிவிப்பு



கட்சி மத்திய செயற்குழு தீர்மானமொன்றை எடுக்கும் பட்சத்தில் நாளை வேண்டுமானாலும் அரசிலிருந்து வெளியேறுவதற்கு நாம் தயார்.

-இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளருமான அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற கட்சி கிளைக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசிலிருந்து வெளியேறாமல் ஏன் இன்னும் அரசுடனேயே இருக்கின்றனர் என சிலர் கேள்வி கேட்கின்றனர். எமது கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானமொன்றை எடுக்கும் பட்சத்தில்

☞2

# எதிரணியினரின் ஆர்ப்பாட்டங்களால் அரசை ஒருபோதும் கவிழ்க்க முடியாது!

## ஜனாதிபதி கோட்டாபய திட்டவட்டம்



எதிர்க்கட்சியினரின் ஆர்ப்பாட்டங்களால் பலமிக்க எமது அரசை ஒருபோதும் வீழ்த்தவே முடியாது. எம்மை ஆட்சியில் அமர்த்திய மக்கள் இப்போதும் எமது பக்கமே நிற்கின்றார்கள்.

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் நேற்று (19) ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தினர். இதன் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அரசுக்கு எதிராக

☞2

## ஐந்து மாவட்டங்களில் புதிய கொத்தணிகள்!



### மக்களே அவதானம் என்கின்றார் சுகாதார சேவைகள் பணிப்பாளர்

புதிய கொரோனா கொத்தணிகள் நாட்டின் 5 மாவட்டங்களில் இனங்காணப்பட்டுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர்

☞2

## பூநகரி சபை 'பட்ஜட்'டும் தோற்கடிக்கப்படும் நிலை

(ந.லோகதயாளன்)

பூநகரி பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் வாக்கெடுப்பில் ஆளும் கட்சியே எதிர்த்து வாக்களிக்கும் முடிவை எட்டியுள்ளது.

பூநகரி பிரதேச சபையில் 20 உறுப்பினர்கள் உள்ள

☞2

## நல்லூர் சங்கிலியன் பூங்காவில் கார்த்திகை வாசம் மலர் முற்றம்

### இந்தியத் துணைத் தூதர் திறந்துவைப்பு





வடக்கு மாகாண மர நடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடத்தும் கார்த்திகை வாசம் மலர் முற்றம் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மலர்ச் செடிகள், மரக்கன்றுகள் காட்சிப்படுத்தலும் விற்பனையும் எதிர்வரும் 26ஆம் திகதி வரை ஒவ்வொரு நாளும் காலை 8.30 மணி முதல் இரவு 7 மணி வரை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடைபெறவுள்ளது.

☞2

## 'பட்ஜட்' தோற்கடிக்கப்பட்டாலும் பொருத்தமானவரை தவிசாளராக நியமித்தால் த.தே.ம. முன்னணி ஆதரவு

### கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் அறிக்கை

(வவுனியா நிருபர்)

வவுனியா வடக்கு பிரதேச சபையின் பாதீடு தோற்கடிக்கப்பட்டாலும் பொருத்தமான ஒருவரை தவிசாளராக நியமித்தால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி ஆதரவளிக்கும் என்று கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் ஜெ.மயூரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் இன்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மக்களின் இனப்பரம்பலையும், இன விகிதாசாரத்தையும் மாற்றியமைக்கும்

☞2

## திருட்டுக்களுடன் தொடர்புடைய நால்வர் வசமாக சிக்கினார்கள்!

(வவுனியா நிருபர்)

வவுனியா மற்றும் கிளிநொச்சி பகுதிகளில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நால்வர் வாள்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவில் கடந்த செப்டெம்பர், ஒக்ரோபர் மாதங்களிலும், இம்மாதமும் பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன என்று வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கமைவாக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் குறித்த சம்பவங்கள் தொடர்பில் வாள்களுடன் நான்கு இளைஞர்களை

☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## 2 ஆண்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசத்தில், நபர் ஒருவர் மற்றுமொரு நபரைத் தாக்கி படுகொலை செய்துள்ளார் என்று தெனியாய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் சிறிமல்தெனிய வத்த, தெனியாய பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயது நபரே மரணமடைந்துள்ளார்.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகலானது கைகலப்பில் முடிந்ததால் இந்தப் படுகொலை இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த குறித்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது அந்த இடத்துக்கு வந்த மற்றுமொரு நபர் தாக்குதலை மேற்கொண்ட நபரைக் கூரிய ஆயுதம் மற்றும் கருங்கல்லால் தாக்கிப் படுகொலை செய்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, வீரக்கெட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெக்குனயாய சந்தைக்கு அருகில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வேகந்தவெல வடக்கு, வேக்கந்தவல பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயது நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் படுகொலையுடன் தொடர்புடைய நபர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்றும், சந்தேகநபரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறோம் எனவும் வீரக்கெட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## நல்லூர் சங்கிலியன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலர் முற்றத்தை யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் திறந்துவைத்தார்.

இதன் ஆரம்ப நிகழ்வில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன், யாழ். மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்திபன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இந்தக் காலப்பகுதியில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தால் பாடசாலை மாணவர்களுக்கு இலவச மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 'பட்ஜட்' ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முனைப்புக்கள் வடக்கு - கிழக்கு பகுதிகளில் அரசால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதன் ஒரு கட்டமாக வவுனியா வடக்கு பிரதேசம் தீவிரமாகப் பறிபோய்க் கொண்டிருக்கின்றது. இதனைக் கண்டித்து எமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்து வருவதுடன், எமது கட்சியால் வவுனியா நகரில் முதன் முதலாக பாரியளவிலான ஆர்ப்பாட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அந்தவகையில் வவுனியா வடக்கு பிரதேசநிலப்பரப்பையும், அதன் பகுதிகளையும் தமிழ்ப் பிரதிநிதி ஒருவரே தொடர்ந்தும் நிர்வகிக்க வேண்டும் என்பதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அன்று தொடக்கம் உறுதியாகவே உள்ளது.

அதனடிப்படையிலே முதன் முதலாக வவுனியா வடக்கு பிரதேச சபை தவிசாளர் தெரிவின்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மூன்று உறுப்பினர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவளித்து தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவுக்கு உதவியிருந்தது. ஆனாலும், தற்போதைய தவிசாளர் பாரபட்சமாக நடப்பதுடன், மக்கள் நலன் சார்ந்த விடயங்களை முன்னெடுப்பதற்கும் தடையாக இருப்பதாக எமது கட்சி உறுப்பினர்கள் தொடர்ச்சியாகத் தெரிவித்து வந்த நிலையில், பாதீட்டிலும் குறைபாடுகள் காணப்பட்டன. அதன் காரணமாகவே நாம் அதனை எதிர்க்க வேண்டிய நிலை உருவாகியது. எமது கட்சி உறுப்பினர்கள் மட்டுமன்றி ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் உறுப்பினர்கள் கூட குறித்த பாதீட்டுக்கு எதிராகவே வாக்களித்தும் இருந்தனர்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சபையை முறையாகக் கொண்டு செல்லக் கூடிய பொருத்தமான ஒருவரை தவிசாளராக நியமிக்கும் பட்சத்தில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வவுனியா வடக்கு பிரதேச சபையின் அதிகாரம் பெரும்பான்மையினரின் கைகளுக்குச் செல்வதைத் தடுக்கும் நோக்கில் தனது ஆதரவை வழங்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களில் பலர் கூட தவிசாளருக்கு எதிரான மனநிலையில் இருக்கின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் பாதீடு தொடர்பான அமர்வுக்கு வருகை தரவில்லை என்பதையும் இங்கு சுட்டிக்காட்டுகின்றோம்.

அத்துடன், வவுனியா வடக்கு பிரதேச சபையானது பெரும்பான்மையினத்தவர்களின் கைகளுக்குச் செல்வதற்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்றும் இடமளிக்காது என்பதை மீள நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

எனவே, வவுனியா வடக்கின் நிலைமையை உணர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொருத்தமான ஒருவரை தவிசாளராக முன்மொழிந்து செயற்படவேண்டும் என நாம் கோருவதுடன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது கொள்கையுடனும், பற்றுறுதியுடனும் தொடர்ந்தும் பயணிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (100)

## பூநகரி சபை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 11 உறுப்பினர்களும், ஏனைய கட்சிகளைச் சேர்ந்த 9 உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றனர். இருந்தபோதும் தற்போதைய தவிசாளர் கூட்டமைப்பின் முடிவுக்குக் கட்டுப்படுவது கிடையாது என்ற உச்சபட்சமான விமர்சனம் உள்ளதால் கூட்டமைப்பின் ஏனைய 10 உறுப்பினர்களும் எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என மாவட்டக் கிளையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதனால் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுமானால் தற்போதைய தவிசாளர் ஐயம்பிள்ளை பதவி இழக்கும் நிலையே ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு தவிசாளர் பதவி இழக்கும் நிலை ஏற்பட்டாலும் பூநகரி பிரதேச சபையானது கூட்டமைப்பின் வசம் உள்ள அறுதிப் பெரும்பான்மை உள்ள சபை என்பதால் மீண்டும் தவிசாளர் கூட்டமைப்பு வசமாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## திருட்டுக்களுடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் கடந்த செப்ரெம்பர் மாதம் 18 பவுண் நகை திருடப்பட்டமை, அதனைத் தொடர்ந்து ஒக்ரோபர் மாதம் ஆச்சிபுரம் பகுதியில் 10 பவுண் நகை மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் திருடப்பட்டமை, சிதம்பரபுரம் பகுதியில் பல்சர் ரக மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டமை, தெற்கிலுப்பைக்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டமை, இம் மாதம் உக்குளாங்குளம் பகுதியில் ஆலயத்துக்குச் சென்ற பெண் ஒருவரிடம் 3 பவுண் சங்கிலி அறுத்துச் செல்லப்பட்டமை மற்றும் கிளிநொச்சி உதயநகர் பகுதியில் சங்கிலி அறுக்கப்பட்டமை மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டமை ஆகிய சம்பவங்களுடன் குறித்த நால்வருக்கும் தொடர்பு இருந்தமை விசாரணைகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், அவர்களிடம் இருந்து 2 மோட்டார் சைக்கிள், 4 வாள்கள், தாக்குதலுக்கு பயன்படுத்தப்படும் பொல்லுகள், 15 பவுண் நகை, முகத்தை மறைக்கும் கறுப்புத்துணிஎன்பனமீட்கப்பட்டுள்ளன. அவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கூறினர். (100)

## அரசிலிருந்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளையே பதவிகளை துறந்து வெளியேறுவதற்கு தயார்.

எமது முதுகில் சவாரி செய்துவிட்டு, எம்மைக் கட்டுப்படுத்த முற்படுகின்றனர். எனவே, உள்ளூராட்சி சபைகளில் நடக்கும் விடயங்கள் தொடர்பில் கட்சி உறுப்பினர்கள் சுயாதீனமாக முடிவெடுங்கள். கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காது - என்றார்.

## எதிரணியினரின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடெங்கும் மக்கள் கிளர்ந்தெழுந்துவிட்டார்கள் என்று சில ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. ஆனால், உண்மையில் அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழவில்லை. எதிர்க்கட்சியினர்தான் அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்துள்ளனர் அவர்கள்தான் ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர். அவர்களின் ஆதரவாளர்கள்தான் அரசுக்கு எதிராகக் கூச்சலிடுகின்றனர்.

இந்த எதிர்க்கட்சியினரின் ஆர்ப்பாட்டங்களால் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலமுள்ள எமது அரசை ஒருபோதும் வீழ்த்தவோ - கவிழ்க்கவோ முடியாது. எம்மை ஆட்சியில் அமர்த்திய மக்கள் இப்போதும் எமது பக்கமே நிற்கின்றார்கள்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலின்போது நாட்டு மக்களுக்கு நாம் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றவில்லை என்பது உண்மைதான். அந்த வாக்குறுதிகளை படிப்படியாக நிறைவேற்றி வருகின்றோம். கொரோனாப் பெருந்தொற்றே இதற்குக் காரணம்.

இந்தத் தொற்றுக் காலத்தைப் பயன்படுத்தி எமது ஆட்சியைக் கவிழ்க்கலாம் என்று எதிர்க்கட்சியினர் முட்டாள்தனமாகச் சிந்திக்கின்றனர். ஆட்சியைத் தீர்மானிப்பது எதிர்க்கட்சியினர் அல்லர் மக்கள்தான் முடிவெடுப்பார்கள் - என்றார்.

## ஐந்து மாவட்டங்களில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

அநுராதபுரம், அம்பாறை, அம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களிலேயே இவ்வாறான கொத்தணிகள் கண்டறியப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுகாதார நெறிமுறைகளை மீறி இப்பகுதிகளில் நடைபெறும் திருமணங்கள், மத நடவடிக்கைகள் மற்றும் பிற நிகழ்ச்சிகளால் இந்தக் கொத்தணிகள் உருவாகியுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் தற்போது தினசரி 700 இற்கும் மேற்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் பதிவாகின்றனர். இறப்பு எண்ணிக்கையும் 20 ஆகக் காணப்படுகிறது. இது சுகாதார அதிகாரிகளிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் கூறினார்.

எனவே, நாடு இயல்பு நிலைக்கு வரும் வரை மக்கள் அதிகளவில் ஒன்றுகூடும் நிகழ்வுகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## திராணி இல்லாத ஜனாதிபதி

**'கணக்குப்பிள்ளை பேசக்கூடாது. கணக்குப் புத்தகம் பேச வேண்டும்' – இது அனுபவ மொழி.**

**இலங்கை அரசியலில் கணக்குப்பிள்ளைகள் தான் அதிகம் பேசுகின்றார்கள். கணக்கு வழக்குப் பற்றிய பதிவோ வேறுவிதமாக இருக்கின்றது.**

**கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் பொதுஜன பெரமுன பெரு வெற்றியீட்டியது என்பது உண்மை.**

**ஆனால் இன்று நிலைமை என்ன என்பதுதான் கேள்வி. அதை ஒட்டித்தான் கணக்குப்பிள்ளைகள் அதிகம் பேசுகின்றனர் – கணக்குப் புத்தகத்தைப் பார்க்கும் வசதியை மறுத்துக் கொண்டு.**

**கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் ராஜபக்ஷக்கள் பெரும் சக்தியாக மீண்டெழுந்தமைக்குக் காரணங்கள் வேறு.**

**பௌத்த, சிங்களப் பேரினவாத வெறியைக் கிளப்பி, அதைப் பெரும் இனமான உணர்வெழுச்சியாகக் காட்டி, பெரும்பான்மை இனத்தவர்கள் மத்தியில் இனக் குரோதத்தைத் தூண்டிவிட்டு, அதன் மூலமே இரண்டு தேர்தல்களிலும் பெரு வெற்றியை ஈட்டி, சரித்திரத் திருப்புமுனையைஏற்படுத்தி, அதிகாரத்தைக்கைப்பற்றினர் ராஜபக்ஷக்கள்.**

**ஆனால் இன்றோ நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. இப்பத்தியில் ஓரிரு தினங்களுக்கு முன் நாம் சுட்டிக்காட்டியபடி சரித்திரம் திரும்புகின்றது.**

**இந்த அரசாங்கத்தின் இரண்டு வருட நிர்வாகத்திலேயே மக்கள் வெறுத்துப் போனார்கள். தேர்தல்களை ஒட்டி ராஜபக்ஷக்கள் ஊதிப்பெருப்பித்த பேரினவாத பலூன் இப்போது காற்றுப்போய் சுருங்கிவிட்டது. ராஜபக்ஷ குடும்ப எதேச்சாதிகாரத்தின் சாயம் வெளுத்துவிட்டது. முகத்திரை கிழிந்துவிட்டது. உண்மை முகம் அம்பலமாகிவிட்டது.**

**கொரோனாத் தொற்றுக் கட்டுப்பாடு, நீதிமன்றத் தடை உத்தரவுகள், போன்றவற்றை மீறி பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தலைநகர் கொழும்பிலும், பிற இடங்களிலும் மக்களின் பெரும் உணர்வெழுச்சியுடன் நடத்திக் காட்டிய நிகழ்வுகள் ராஜபக்ஷக்களின் மக்கள் செல்வாக்குப் படுக்கத் தொடங்கிவிட்டது என்பதற்கு சாட்சியம்தான்.**

**ஆனால், நிறைவேற்றதிகார ஜனாதிபதி பலத்துடன் எதேச்சாதிகார ஆட்சி நடத்தும் கோட்டாபய ராஜபக்ஷ இந்த யதார்த்த நிலையை ஒப்புக்கொள்கின்றார் இல்லை.**

**ஆர்ப்பாட்டங்களால் அரசை ஒரு போதும் கவிழ்க்க முடியாது என்று அவர் சூளுரைக்கின்றார். மக்கள் ஆதரவு இப்போதும் தங்கள் பக்கம்தான் என்று புரட்டுப் பேச்சுப் பேசுகின்றார்.**

**மக்கள் ஆதரவு தம் பக்கம் இருக்கும் என்ற தம் கூற்றை அவரால் நிரூபித்துக் காட்டமுடியுமா? நிரூபித்துக்காட்ட அவருக்கு வாய்ப்பிருந்தும், உண்மை நிலைவரம் அவருக்குத் தெரிந்திருப்பதால், அத்தகைய விஷப் பரீட்சையில் அவர் இறங்கமாட்டார். அதற்கான அரசியல் துணிச்சல் அவருக்குக் கிடையாது.**

**மாகாண சபைத்தேர்தல்கள் நிலுவையில் இருக்கின்றன. உள்ளூராட்சித் தேர்தல்களை அடுத்த ஆண்டு முற்பகுதிக்குப்பின் எப்போதும் நடத்தலாம்.**

**தமது மக்கள் செல்வாக்கை நிரூபிப்பதற்கு அடுத்த இரண்டு மாதங்களுக்குள் இவற்றுள் ஒரு தேர்தலை அறிவித்து, நடத்தி, மக்கள் செல்வாக்கு யாருக்கு உள்ளது என்பதை அவர் பரீட்சித்துப் பார்க்க முடியும்?**

**ஆனால் அவர் அதைச் செய்யமாட்டார். அதைச் செய்யாமல் மக்கள் ஆதரவும் செல்வாக்கும் தம்முடன்தான் தொடர்ந்தும் உள்ளன என அவர் வாய்பந்தல் போடுவார், தம்பட்டம் அடிப்பார்.**

**ஏனெனில் உண்மை நிலைமை – யதார்த்தப் புறநிலை – அவருக்கு நன்கு தெரியும். அதை எதிர்கொண்டு உண்மையை வெளிப்படுத்தும் திராணி அவருக்கு இல்லை.**

## போதைக்கு அடிமையாகும் பெண்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கு நடவடிக்கை

போதைப்பொருளுக்கு அடிமையாகிவரும் பெண்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்காக புதிய மத்திய நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் போதைக்கு அடிமையாகி சிறைச்சாலையில் இருப்பவர்களைப் புனர்வாழ்வு மத்திய நிலையங்களுக்கு அனுப்பும் எண்ணிக்கையை அதிகரிக்க இருக்கின்றோம் என நீதி அமைச்சர் அலிசப்றி தெரிவித்தார். புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் காரியாலயத்தில் தற்போது இடம்பெற்றுவரும் நடவடிக்கை மற்றும் எதிர்கால வேலைத்திட்டம் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலின்போது கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்–

போதைப்பொருளுக்கு அடிமையாகி இருப்பவர்களால் சமூகம் பாரிய அழுத்தங்களுக்கு ஆளாகி இருக்கின்றது. அதனால் அவ்வாறானவர்களை புனர்வாழ்வளிப்பதற்கு தேசிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும். போதைக்கு அடிமையாகி இருப்பவர்களை சிறைப்படுத்தி வைப்பதற்குப் பதிலாக அவர்களை முறையாக புனர்வாழ்வளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எதிர்காலசந்ததியினரைபோதைப்பொருள் பாவனையில் இருந்து பாதுகாத்துக் கொள்வதாக இருந்தால் இதுதொடர்பில் சமூகத்தை பரந்தளவில் அறிவுறுத்த வேண்டும்.

அத்துடன் புனர்வாழ்வு ஆணையாள நாயகம் காரியாலயத்தால் போதைப்பொரு ளுக்கு அடிமையாகி இருக்கும் நபர்களை புனர்வாழ்வளித்து, அவர்களை சமூகத்துக் பயன்தரும்வகையில்உருவாக்கிசமூகத்துடன் இணைக்கும் செயல் வரவேற்கத்தக்கது.

அவர்கள் புனவர்வாழ்வளிக்கப்பட் சமூகத்துடன் இணைக்கப்பட்டதன் பின்ன அவர்கள் தொடர்பில் தேடிப்பார்க்கும் ந வடிக்கையைசரியாகமேற்கொள்ளவேண்டும்

மேலும் போதைக்கு அடிமையாகியவ களைசிறைப்படுத்துவதன்மூலம்அவர்களை இந்த நிலைமையில் இருந்து மீட்பது கடின மான செயல். அதனால் எதிர்காலத்தில் இவ்வாறானவர்களை புனர்வாழ்வளிக்க அனுப்பும் எண்ணிக்கையை அதிகரிக்க இருக்கின்றோம்.

புதிய புனர்வாழ்வு மத்திய நிலையங்களை அமைப்பதன் மூலம் அடுத்துவரும் வரு டங்களுக்குள் புனர்வாழ்வளிக்க அனுப்பு வர்களின் எண்ணிக்கையை முறையே 8,000வரை அதிகரிக்க இருக்கின்றோம்.

அத்துடன் போதைக்கு அடிமையாக இருக்கும் பெண்களை புனர்வாழ்வளி பதற்காக கவனம் செலுத்தி இருக்கின்றோம். எதிர்வரும் காலத்தில் புதிய மத்திய நிலையங் களை அமைக்கும்போது இதற்காகவும் சந்தர்ப்பம் வழங்கப்படும். என்றார்.

## தங்கத்தின் விலை மேலும் எகிறவுள்ளது



உலகசந்தையில்தங்கத்தின்விலையில் திடீர் அதிகரிப்பு ஏற்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. உலக சந்தையின் தங்கத்தின் நிலைவரம் தொடர்பில் புதிதாக வெளியான அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட் டுள்ளது.

அதற்கமைய ஓர் அவுன்ஸ் தங்கத்தின் விலை 1,900 அமெரிக்க டொலர்களைக் கடக்கவுள்ளதாக நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த அதிகரிப்பு மிக சிறிய காலப்பகு திக்குள் இடம்பெறவுள்ளதாக நிபுணர்கள் கூறியுள்ளனர். இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை தங்கம் ஓர் அவுன்ஸ் 1,863.40 அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதென குறிப்பிடப்படுகின்றது.




## பலவெற்றிகளை வென்ற இளம் வீராங்கனை காவேரி பிரதீபன் கொடிய நோயால் மரணம்!

யாழ்.தேசிய மட்ட வீராங்கனை காவேரி பிரதீபனின் (அளவெட்டி அருணோதயவின் சாதனை மங்கை) மரணம் அப்பகுதி மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

மாரத்தான் ஓட்டம், குறுந்தூர மற்றும் நெடுந்தூர ஓட்டங்கள், கோல் ஊன்றி பாய்தல், 100, 400 மீற்றர் தொடர் ஓட்டங்கள், ஹொக்கி, கூடைப்பந்து, வலைப்பந்து இப்படி பல விளையாட்டுக்களில் தேசிய மட்டங்களிலும், மாகாண, மாவட்ட, மட்டங்களிலும் பல பதக்கங்களை வென்றெடுத்தவர் யாழ்ப்பாணம் அளவெட்டியை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட 29 வயதான காவேரி பிரதீபன்.

இவர் கடந்த மூன்று வருடங்களாக அப்லாஸ்டிக் அனீமியா என்ற இரத்த சோகை நோயால் அவதிப்பட்டு வந்தார்.

கடந்த 2017 ஆம் ஆண்டு புற்றுநோயால் பாதிக்கப்பட்ட இவர், கடந்த 2020 ஆண்டு மேலதிக வைத்திய சிகிச்சைக்காக இந்தியா சென்றிருந்தார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை, பலனின்றி கடந்த 15 ஆம் திகதி உயிரிழந்தார்.

அவரது சடலம் கிளிநொச்சியிலுள்ள அவரது இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள நிலையில் பலரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

# லிதுவேனியாவில் தாய்வான் அலுவலகம்; சீனா கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது

தாய்வான் விவகாரத்தில் லிதுவேனியா என்ன விதைக்கிறதோ அதனையே அறுவடை செய்யும் என சீனா எச்சரித்துள்ளது.

தாய்வானுக்கான பிரதிநிதித்துவ அலுவலகத்தை தங்களது நாட்டின் தலைநகரில் திறக்க அனுமதித்ததன் பின்னணியில் சீனா இந்த கருத்தினை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து பெய்ஜிங்கில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ஷாவ் லிஜியான் கூறுகையில்,

'லிதுவேனியா தலைநகர் வில்னியஸில் தாய்வானுக்கான பிரதிநிதித்துவ அலுவலகம் திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளது, சீனாவின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடும் செயலாகும். இதற்காக சீனா உரிய பதிலடி கொடுக்கும்' என கூறினார்.

எனினும், லிதுவேனியாவுக்கு எதிராக எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை அவர் கூறவில்லை.

உலகின் எல்லா முக்கிய நாடுகளுடனும் வர்த்தக அலுவலகங்களையும்



அதிகாரப்பூர்வமற்ற தூதரகங்களையும் தாய்வான் கொண்டுள்ளது. தாய்வானுடன் 15 நாடுகள் மட்டுமே அதிகாரப்பூர்வமான தூதரக உறவைக் கொண்டுள்ளன.

முதலாம் உலகப் போருக்குப் பின் ஜேர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த லிதுவேனியா, கடந்த 1918ஆம் ஆண்டில் சுதந்திரப் பிரகடனம் செய்தது. தாய்வானும் சீனாவின் கிங் அரச வம்ச ஆட்சியிலிருந்து அதே ஆண்டில் தன்னை விடுவித்துக் கொண்டது.

அதையடுத்து, இரு நாடுகளும் கடந்த 1921ஆம் ஆண்டு தூதரக உறவை ஏற்படுத்திக்கொண்டன. லிதுவேனியாவை சோவியத் ஒன்றியம் கடந்த 1940ஆம் ஆண்டில் இணைத்துக் கொள்ளும் வரை இந்த உறவு தொடர்ந்தது.

பின்னர் சோவியத் ஒன்றியம் சிதறுண்டு, லிதுவேனியா மீண்டும் தனி நாடான பிறகு தாய்வானுக்கு பதில் சீனாவுடன் தூதரக உறவை ஏற்படுத்திக் கொள்ள அந்த நாடு முடிவு செய்தது.

இந்தச் சூழலில், சீனாவால் லிதுவேனியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாக கடந்த 2019ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேசிய பாதுகாப்பு அறிக்கையில் கூறப்பட்டது. அதற்குப் பிறகு, லிதுவேனியாவுக்கும் தாய்வானுக்கும் இடையே நெருக்கம் அதிகமானது.

இரு நாடுகளுக்கும் இடையே தூதரக அலுவலகத்துக்கு இணையான பிரதிநிதித்துவ அலுவலகத்தை அமைத்துக் கொள்ள லிதுவேனிய நாடாளுமன்றம் கடந்த ஒக்ரோபர் மாதம் ஒப்புதல் அளித்தது.

இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஏற்கெனவே லிதுவேனியாவுக்கான தங்கள் நாட்டுத் தூதரை சீனா திரும்ப அழைத்தது. மேலும், தங்கள் நாட்டிலிருந்து லிதுவேனியத் தூதரையும் வெளியேற்றியது.

இந்தச் சூழலில், வில்னியஸ் நகரில் தாய்வான் பிரதிநிதித்துவ அலுவலகம் கடந்த வியாழக்கிழமை திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஒலியை விட வேகமான ஏவுகணை பரிசோதனை செய்தது ரஷ்யா!

ஒலியை விட ஐந்து மடங்கு வேகமாக சென்று இலக்கை தாக்கி அழிக்கும் சிர்கான் வகை ஹைபர்சோனிக் ஏவுகணையை பரிசோதனை செய்துள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

கப்பலில் இருந்து செலுத்தப்பட்ட ஏவுகணை பேரண்ட்ஸ் கடல் பகுதியில் இருந்த இலக்கை துல்லியமாக அழித்ததாக ரஷ்ய இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் கருங்கடல் பகுதியில் நேட்டோ படைகள் பயிற்சியில் ஈடுபட்டதற்கு ரஷ்ய ஜனாதிபதி கண்டனம் தெரிவித்த நிலையில், ரஷ்யாவின் திடீர் ஏவுகணை சோதனை ஐரோப்பிய நாடுகளுக்கு மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.



## கனடாவின் வெள்ளப் பேரழிவு 18 ஆயிரம் பேர் சிக்கி தவிப்பு!

கனடாவின் மேற்கு மாகாணத்தை தடம் புரட்டி போட்டுள்ள வெள்ளப் பேரழிவினால், சுமார் 18,000பேர் வெள்ள நீரில் சிக்கித் தவிக்கின்றனர் என அதிகாரிகள் தெரி வித்துள்ளனர். மண்சரிவுகள், வீதிகள், வீடுகள், பாலங்கள் மற் றும் பிற முக்கிய உட்கட்டமைப்புக்களை அழித்த இந்த பேரழிவு, நாட்டின் விலையுயர்ந்த இயற்கை பேரழிவு என விவரிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் முக்கிய போக்குவரத்து பாதைகளை அடைத்துள்ளன. இதனால் மாகாணத்தில் ஆயிரக்கணக்கானோர் சிக்கித் தவிக்கின்றனர். வன்கூவரை மாகாணத்தின் உட்புறத்துடன் இணைக்கும் நெடுஞ்சாலை 7, மாற்று, ஒற்றைப் பாதை போக்குவரத்திற்கு மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் ரொப் பிளெமிங் தெரிவித்தார். மற்றொரு முக்கிய பாதை வார இறுதிக்குள் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது,



மற்ற நெடுஞ்சாலைகள் சரி செய்ய பல மாதங்கள் ஆகலாம்.

கனேடிய மற்றும் அமெரிக்க எல்லை அதிகாரிகளுடன் பேச்சு நடைபெற்று வருவதாக மத்திய போக்குவரத்து அமைச்சர் ஒமர் அல்காப்ரா தெரிவித்தார்

வன்கூவரில் உள்ள மிகப் பெரிய கனேடியத் துறை முகத்திற்கான அணுகலை இந்த வெள்ளம் துண்டித்ததால், உலகளாவிய விநியோகச் சங்கிலி சீர்குலைந்துள்ளது.

கனடாவின் அவசரகால தயார்நிலை அமைச்சர் பில் பிளேயர், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சமூகங்களில் முக்கியமான உள்கட்டமைப்பை மீண்டும் கட்டியெழுப்பவும் மீட்டெடுக்கவும் மத்திய அரசாங்கம் பிரிட்டிஷ் கொலம்பியாவுக்கு உதவும் என்று கூறினார்.

கனடாவின் மிகவும் தீவிரமான மற்றும் பலதரப்பட்ட விவசாயப் பகுதிகளில் ஒன்றான அபோட்ஸ் போர்ட், கடுமையாக பாதிக்கப்பட்ட இடங்களில் ஒன்றாகும். இங்குள்ள ஆயிரக்கணக்கான பண்ணை விலங்குகள் இறந்துள்ளன.

# அமெரிக்க ஜனாதிபதி அதிகாரத்தை பெற்ற முதல் பெண் 'கமலா ஹாரிஸ்'

அமெரிக்க ஜனாதிபதியான ஜோ பைடனின் பதவி, தற்காலிகமாக துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸுக்கு வழங்கப்பட்டது.

இதன்மூலம் அமெரிக்க ஜனாதிபதி அதிகாரத்தை பெறும் முதல் பெண்மணி என்ற பெருமையை கமலா ஹாரிஸ் பெற்றுள்ளார் மற்றும் முதல் கறுப்பின மற்றும் தெற்காசிய அமெரிக்கர் ஆவார்.

ஜோ பைடனின் வழக்கமான உடல் பரிசோதனையின் ஒரு பகுதியாக கொலோனோஸ்கோபி எனப்படும் பெருங்குடல் பரிசோதனை செய்யப்பட்டது.

இதனால், அவருக்கு மயக்க மருந்து கொடுக்கப்பட்டது. இதனால் ஜனாதிபதிக்கான அதிகாரத்தை குறுகிய நேரத்திற்கு மட்டும் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதன்படி 57 வயதான கமலா ஹாரிஸ் 85 நிமிடங்கள் ஜனாதிபதி பொறுப்பினை பொறுப்பேற்று நடத்தினார்.

பைடனின் மருத்துவர் அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு ஒரு அறிக்கையை வெளியிட்டார், அவர் ஆரோக்கியமாக இருக்கிறார் எனவும் தனது கடமைகளைச் செய்ய முடியும் என்றும் கூறினார்.

ஜனாதிபதியின் 79ஆவது பிறந்த நாளை முன்னிட்டு இந்த மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கமலா ஹாரிஸ், வெள்ளை மாளிகையின் மேற்குப் பகுதியில் உள்ள தனது அலுவலகத்தில் இருந்து தனது பணிகளை மேற்கொண்டார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.



# தடுப்பூசி செலுத்தியவர்களுக்கு மட்டுமே பொது இடங்களில் அனுமதி வழங்கப்படும்



கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக தடுப்பூசி செலுத்தும் பணியில் வேகம் காட்டி வரும் தமிழக அரசு, வாரந்தோறும் சிறப்பு முகாம்களை நடத்தி அதிகமான மக்களுக்கு தடுப்பூசி செலுத்தி வருகிறது. தற்போது வீடு தேடி தடுப்பூசி செலுத்தும் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன் அடுத்த கட்டமாக, வாரத்தில் இரண்டு நாள்களுக்குத் தடுப்பூசி முகாமை விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாக தமிழக சுகாதாரத் துறை அண்மையில் அறிவித்திருந்தது.

18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி செலுத்துவதை இலக்காகக் கொண்டு தமிழக அரசு முழு வீச்சில் செயல்பட்டு வரும் நிலையில், தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களுக்கு மட்டுமே பொது இடங்களில் அனுமதி அளிக்கப்படும் என தமிழக பொதுச் சுகாதாரச் சட்டத்தில் திருத்தம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அரசாணையில், தடுப்பூசி செலுத்திக்கொள்வதற்கு தகுதிபெற்றோர் அனைவரும் தடுப்பூசிகளைச் செலுத்தியுள்ளனரா என்பதை பாடசாலைகள், கல்லூரிகள், கடைகள், சந்தைகள், பொது இடங்கள் அனைத்திலும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் உறுதி செய்ய வேண்டியது அவசியம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிறுவனங்களும், தனியார் துறையினரும் தமது நிறுவன ஊழியர்கள் தடுப்பூசி செலுத்தியதை உறுதி செய்ய வேண்டும் எனவும் தமிழக சுகாதாரத்துறை அறிவுரை விடுத்துள்ளது.

மக்கள் கூடும் பொது இடங்களில் தடுப்பூசி செலுத்ியமை குறித்து பரிசோதனைகளை மேற்கொண்டு அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் எனவும் திரையரங்குகள் மற்றும் அனைத்து வித பொழுதுபோக்கு இடங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்றவற்றில் தடுப்பூசி செலுத்தியவர்கள் மட்டுமே நுழைய அனுமதிக்கப்படுவதை பரிசோதித்து உறுதி செய்ய வேண்டும் எனவும் தமிழக சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அணு உலையில் கோளாறினால் மின்னுற்பத்தி நிறுத்தப்பட்டது

### கூடங்குளத்தில்



தமிழகத்தின் நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் தலா 1,000 மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொண்ட 2 அணு உலை கள் அமைக்கப்பட்டு மின் உற்பத்தி நடைபெற்றுவருகிறது. அங்கு புதிதாக 4 அணு உலைகளை அமைக்கும் பணிகளும் முழுவீச்சில் நடந்து வருகின்றன.

இந்த நிலையில், அங்குள்ள இரண்டாவது அணு உலையில் திடீரெனத் தொழிநுட்பக் கோளாறு ஏற்பட்டு, மின்னுற்பத்திப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன என செய்திகள் வெளியாகியுள்ளன. இதன் காரணமாக அங்கு நடந்து வந்த 1,000 மெகாவாட் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழிநுட்பக் கோளாறு ஓரிரு நாள்களில் சரி செய்யப்பட்டு மீண்டும் மின் உற்பத்தி தொடங்கும் என அணுமின் நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. முதலாவது அணு உலையில் தற்போதும் 1,000 மெகாவாட் மின் உற்பத்தி தொடர்ந்து நடந்து வருவதாகவும் அந்த வட்டாரங்கள் உறுதிப் படுத்தியுள்ளன.

## வேளாண் சட்டங்கள் மீளப் பெறப்பட்டமையை கர்நாடக முதலமைச்சர் பசவராஜ் வரவேற்பு



புதிதாகக் கொண்டுவரப்பட்ட 3 வேளாண் சட்டங்களை மீளப்பெறுகிறேன் என இந்தியப் பிரதமர் மோடி நேற்று அறிவித்தார். இதை கர்நாடக முதலமைச்சர் பசவராஜ் பொம்மை உள்படபலஅரசியல்கட்சிகளின்முக்கியஸ்தர்கள் வரவேற்றுள்ளனர்.

ஜனநாயக ரீதியாக ஒரு சட்டம் கொண்டு வரப்படும்போது, அதற்கு ஆதரவும், எதிர்ப்பும் வருவது என்பது சகஜமானது. அதில் நியாயத்தின் பக்கம் நிற்கும் வகையில் பிரதமர் மோடி முடிவு எடுத்துள்ளார். 3 வேளாண் சட்டங்களை மீளப் பெறக்கோரி விவசாயிகள் நீண்ட நாள்களாக போராட்டம் நடத்தி வருகிறார்கள். அவர்களின் கோரிக்கையை ஏற்று அந்த சட்டங்களை மீளப்பெறுகிறேன் என மோடி அறிவித்துள்ளார்.

இதை விவசாயிகள் வரவேற்றுள்ளனர். தான் நடத்திய போராட்டத்திற்கு வெற்றி கிடைத்திருப்பதாக காங்கிரஸ் சொல்கிறது. இது அக்கட்சியின் தரம் தாழ்ந்த அரசியலையே காட்டுகிறது. டெல்லியில் விவசாயிகள் எந்த அரசியல் கட்சியின் ஆதரவுமின்றிப் போராட்டம் நடத்தினர். அரசியல் கட்சிகளை அவர்கள் தொலைவில் வைத்தனர். ஜனநாயகத்திற்கு உட்பட்டுஇந்தியப்பிரதமர்மோடிமுடிவெடுத்துள்ளார். இதை நான் வரவேற்கிறேன், என்று கர்நாடக முதலமைச்சர் பசவராஜ் பொம்மை கூறியிருக்கிறார்.


## கிரிப்டோ கரன்சியில் நான் முதலீடு செய்யவில்லை இந்தியத் தொழிலதிபர் ஆனந்த் மகேந்திரா விளக்கம்



இந்தியாவின் பிரபல தொழிலதிபர் ஆனந்த் மகேந்திரா, கிரிப்டோகரன்சியில் முதலீடு செய்துள்ளனர் என வெளியான செய்தி குறித்து தனது அதிர்ச்சியையும் விளக்கத்தையும் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

கிரிப்டோகரன்சி குறித்த தகவல்கள் அவ்வப்போது பரபரப்பை ஏற்படுத்திவரும் நிலையில், கிரிப்டோகரன்சியை இந்தியாவில் 10 கோடிக்கும் மேற்பட்டவர்கள் வைத்துள்ளனர் என தகவல் வெளியாகியிருந்தது. அந்த வரிசையில், பிரபல இந்தியத் தொழிலதிபர் ஆனந்த் மகேந்திராவும் அண்மையில் கிரிப்டோகரன்சியில் முதலிட்டுள்ளதாகவும் இது வணிக உலகத்தில் பெரும் தாக்கத்தையும் அதிர்வையும் ஏற்படுத்தியுள்ளதாகவும்சமூகவலைத் தளங்களில் பதிவுகள் வெளியிடப்பட்டு வந்தன.

இது மிகவும் வேடிக்கையாக உள்ளது. அதே நேரத்தில் இது மாதிரியான செய்திகள் ஆபத்தானவையும்கூட. இந்தச் செய்தியை இணையத்தில் கண்ட ஒருவர் என்னை எச்சரிக்கை செய்தார். இது முற்றிலும் புனையப்பட்ட மற்றும் மோசடி மிக்க செய்தி என்பதை மக்களுக்கு உணர்த்த நான் விரும்பு கிறேன். போலிச் செய்திகளை புதியதொரு உச்சத்திற்கு இது கொண்டு சென்றுள்ளது. நான் கிரிப்டோ கரன்சியில் ஒரு ரூபா கூட முதலீடு செய்யவில்லை என தனது டுவிட்டர் பதிவில் ஆனந்த மகேந்திரா தெரி வித்துள்ளார்.



## கனமழையால் வீடு இடிந்து விழுந்து விபத்து வேலூரில் குழந்தைகள் உள்பட 9 பேர் சாவு

தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. குறிப்பாக, அம்மாவட்டம் பேரணாம்பட்டு பகுதியில் பலத்த மழை பெய்ததன் காரணமாக பேர்ணாம்பட்டு ரங்கம்பேட்டை கானாற்றில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதனால், அங்குள்ள குல்ஷார் வீதி, அஜிஜியா வீதிகளில் கானாற்று வெள்ளம் புகுந்தது. அந்தப் பகுதியைச் சேர்ந்த பொது மக்கள் மதத்தலங்கள் மற்றும் பள்ளிக் கூடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தொடர் மழை பெய்து வருவதால் அப்பகுதியிலுள்ள சிலர் மாடி வீடுகளில் வசித்துவரும் உறவினர்கள், நண்பர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர். அவ்வாறு குழந்தைகள் உள்பட மொத்தம் 13 பேர் தங்கியிருந்த வீடொன்று கனமழை காரணமாக நேற்று அதிகாலை திடீரென முழுவதுமாக இடிந்து விழுந்ததில், வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தவர்கள் இடிபாடுகளில் சிக்கினர்.

இதுகுறித்து அப்பகுதி மக்கள் அளித்த தகவலினடிப்படையில் சம்பவ இடத்திற்கு தீயணைப்பு படையினர் மற்றும் பொலிஸார் விரைந்துசென்று மீட்புப்பணியில் ஈடுபட்டனர். ஆனாலும், வீடு இடிந்து விழுந்ததில் இடிபாடுகளுக்குள் சிக்கி 4 குழந்தைகள் உள்பட மொத்தம் 9 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 9 பேரின் உடல்களும் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. காயமடைந்த 4 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# போரில் இறந்த அனைவருக்காகவும் இறைவேண்டல் என்பது அவசியம்

## நீதிக்கும் அமைதிக்குமான குருக்கள் துறவிகள், வடக்கு - கிழக்கு அமைப்பு தெரிவிப்பு

போரில் இறந்த அனைவருக்காகவும் இறைவேண்டல் செய்வதென்பது தமிழர் நெஞ்சங்களில் வாழும் மாவீரர்களையும், இன அழிப்புக்குள்ளான தமிழ் மக்களின் தியாகங்களையும், சமரசம் செய்வதாகாது என நீதிக்கும் அமைதிக்குமான குருக்கள் துறவிகள், வடக்கு – கிழக்கு அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நீதிக்கும் அமைதிக்குமான குருக்கள் துறவிகள், வடக்கு–கிழக்கு அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில்,

அண்மையில் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வரும் வடக்கு–கிழக்கு ஆயர் மன்றம் வடக்கு–கிழக்கு வாழ் தமிழ் கத்தோலிக்க மக்களின் கிறிஸ்தவ வாழ்வை பண்பாட்டு மயமாக்கி அதற்கான செயற்பாடுகளை ஒருங்கிணைத்து நெறிப்படுத்துவதையும், ஒட்டுமொத்த ஈழத்தமிழ் மக்களின் கூட்டுரிமைகளுக்காக குரல் கொடுப்பதையும், இலங்கைத் தீவில் நீதியில் அடித்தளமிடப்பட்ட அமைதியை நிலைநாட்டுவதற்காக உழைப்பதையும் நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகிறது.

இந்நிலையில் அண்மையில் அவர்களால் வெளியிடப்பட்ட ‘போரில் இறந்த அனைவரையும்’ நினைவு கூர்ந்து இறைவேண்டல்செய்வதற்கான அழைப்பு தமிழ் தேசியத் தரப்பில் பல எதிர்ப்பலைகளை உருவாக்கியிருப்பதை அவதானித்து ‘நீதிக்கும் அமைதிக்குமான குருக்கள் துறவிகள், வடக்கு–கிழக்கு’ எனும் அமைப்பினராகிய நாம் மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.

ஆகவே ஈழத்தமிழ் மக்களின் விடிவுக்கான கத்தோலிக்க திரு அவையின் தொடர் அர்ப்பணத்தை உறுதி செய்யும் முகமாக பின்வரும் கருத்துக்களை முன்வைக்க விரும்புகின்றோம்.

நவம்பர் மாதம் இறந்த அனைவருக்காகவும் இறை வேண்டல் செய்யும் மாதமாக உலகெங்கும் வாழும் கிறிஸ்தவ மக்களால் காலங்காலமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. இக்காலத்தில் கல்லறைகளை தரிசிப்பதையும் இறந்தவர்களுக்கான வழிபாடுகளை மேற்கொள்வதையும் கிறிஸ்தவ மக்கள் தமது கடமையாக கருதி செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இத்தகைய ஒரு நீண்ட மரபின் ஒரு பகுதியாகவே நாம் வடக்கு–கிழக்கு ஆயர் மன்றத்தின் மேற்படி வேண்டுகோளை பார்க்கின்றோம். அதற்கு அப்பால் இதற்கு எந்தவித அரசியல் பரிமாணமும் இல்லை என்பதே எமது நிலைப்பாடு.

மேற்படி அழைப்பில் நவம்பர் மாத மூன்றாவது சனிக்கிழமையில் போரில் இறந்த அனைவருக்காகவும் செபிக்கும்படி அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததே தவிர நவம்பர் இருபதாம் திகதி என்றல்ல. இவ்வருடம் அது 20ம் திகதி வருகிறது என்பதற்கப்பால் இந்த தினத்துக்கு வேறு முக்கியத்துவம் கிடையாது. உதாரணமாக அடுத்தடுத்த வருடங்களில் இது முறையே 19, 18, 17, என மாறி வரும் என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

மே 18ஐ இதே ஆயர் மன்றம் ஈழத்தமிழ் இனப்படுகொலை நாளென பிரகடனப்படுத்தி நினைவுகூர கடந்த மே மாதத்தில் அழைப்பு விட்டிருந்ததையும், இங்கு நினைவூட்ட விரும்புகிறோம். ஆகவே போரில் இறந்த அனைவருக்காகவும் இறைவேண்டல் செய்வதென்பது தமிழர் நெஞ்சங்களில் வாழும் மாவீரர்களையும், இன அழிப்புக்குள்ளான தமிழ்மக்களின் தியாகங்களையும் சமரசம் செய்வ தாகாது. ஏற்கனவே தமிழ் மக்கள் நினைவு கூரு கின்ற நாள்களில் அவர்களை நினைவு கூர்வது வரலாற்றுக் கட்டாயம் என்ப தையும் வலியுறுத்து கின்றோம். தமிழ்த் தேசியப் பரப்பு மத வரையறைகளைக் கடந்து ஈழத்தமிழ் மக்களை ஈழத்தமிழ்த் தன்மையில் ஒருங்கிணைக்கின்றது. இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை பயன் படுத்தி எமது தமிழ்த் தேசிய ஒற்றுமையை குலைக்க முயலும் ஆபத்துப் பற்றியும் நாம் அனைவரும் விழிப்பா யிருக்க வேண்டும். தமிழ் மக்கள் மத்தியிலே அண்மையில் அதிகரித்துவரும் மத முரண்பாடுகள் குறித்து விரைந்து செயற்பட்டு நல்லிணக்கத்தையும் ஒத்துழைப்பையும் தொடர்ந்து பேண நாம் முன்வரவேண்டும்.

எதிர்காலத்தில் இத்தகைய தவறான புரிதல்களை தவிர்க்கும் முகமாக வடக்கு கிழக்கு ஆயர் மன்றம், தமிழ்த் தேசியம் சார் விடயங்களில் வடக்கு கிழக்கில் உள்ள ஏனைய சமயத் தலைவர்களோடும், சிவில் சமூக அமைப்புக்களோடும் நெருக்கமான ஒத்துழைப்பை தொடர்ந்து பேணும் என எதிர்பார்க்கின்றோம்.

இறுதியாக ஈழத்தமிழர்களின் கூட்டு நினைவுகூர்தல் என்பது தமிழ்த் தேச கட்டுமானத்தின் பிரிக்க முடியாத அங்கமாக உள்ளது என்பதை நினைவூட்டி, ஈழத்தமிழர்களின் விடுதலைக்கான எமது தொடர் அர்ப்பணத்தையும் அனைத்துத் தரப்புக்கும் மீண்டுமொருமுறை உறுதி செய்கின்றோம் என்றுள்ளது.

# சிவில் செயற்பாட்டாளர்களுக்கு நீதிமன்றத் தடையுத்தரவு கோரல்

## மட்டு தலைமையகப் பொலிஸார் அறிக்கை

மட்டக்களப்பு ஆயர், அருட் தந்தையர்கள் உட்பட அரசியல் பிரமுகர்கள், சிவில் செயற்பாட்டாளர்களுக்கு நீதிமன்றத் தடையுத்தரவு கோரி மட்டு தலை மையகப் பொலிஸாரால் அறிக்கை சமர்ப் பிக்கப்பட்டுள்ளது.

யுத்ததால் மரணித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை நினைவு கூருவது தொடர்பில் மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் நிலையத்தினால் நீதிமன்றத் தடையுத்தரவு பிறப்பிக்கக்கோரி மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர், அருட் தந்தையர்கள், மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட்டோரின் பெயர்கள் உள்ளீர்க்கப்பட்டு மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பி.கே. கெட்டியாராச்சி அவர்களினால் இவ்வறிக்கை இன்றைய தினம் மன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

எதிர்வரும் நாட்களில் மாவீரர் தின நிகழ்வுகள் மற்றும் வடக்கு கிழக்கு ஆயர்களினால் 20 ஆம் திகதி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு தொடர்பான அறிக்கை என்பவற்றை மையப்படுத்தி இத் தடையுத்தரவு கோரும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2021.11.19 ஆம் திகதி தொடக்கம் 2021.11.27ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்திலும் மட்டக்களப்பு நீதிமன்ற எல்லைக்குள் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் யுத்தத்தில் மரணித்த தடை செய்யப்பட்ட இயக்கமாகிய தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களை நினைவு கூரும் முகமாக மட்டக்களப்பு ஆயரகத்தின் அதி வணக்கத்துக்குரிய பேராயர் பொன்னையா ஜோசப் என்பவருடைய தலைமையின் கீழ் விளக்கேற்றி நினைவு கூரல் மற்றும் வழிபாடு நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதாக புலனாய்வுத் தகவல்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவ்வாறான நிகழ்வுகள் நடைபெற்றால் அதற்கு எதிரானவர்கள் எதிர்ப்பு நடவடிக் கைகளில் ஈடுபட வாய்ப்புகள் இருப்பதாகவும், இவ்வியக்கமானது இலங்கை அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டுள்ளமையால் பயங்கரவாத செயற்பாடு களை மீண்டும் இந்த நாட்டில் தலை தூக்குவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன எனவும், இந்த நிகழ்வுகளுக்கு வெளிமாவட்டங்களில் இருந்தும், முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் வருவதனால் மக்களின் அன்றாட இயல்பு நிலை பாதிக்கப்படும் எனவும், இனங்களுக்கிடையே மோதல்கள் ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன எனவும் இவ்வாறு தடை செய்யப்பட்டுள்ள இயக்கங்களின் நிகழ்வுகளை நடத்துவதன் மூலம் எதிர்காலத்தில் தடை செய்யப்பட்ட இயக்கங் களை மீண்டும் தூண்டுகின்ற செயல்களாக அமையும் எனவும் கூறப்பட்டு இந்நிகழ்வு களுக் கான தடையுத்தரவினை அதிவணக்கத்துக்குரிய ஆயர் பொன்னையா ஜோசப் மற்றும் அவரோடு இணைந்த அருட் தந்தையர்களுக்கும் பிறப்பிக்கு மாறு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## தமிழ் மக்களுக்கு

# போராளிகளை நினைவுகூறுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை

## மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவிப்பு

ஜே.வி.பியினர் இறந்த தங்களுடைய போராளிகளை நினைவு கூறுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருக்கின்றது, ஆனால் தமிழ் மக்களுக்கு அதற்கான சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை என்றால் இனவாத அடிப்படையில் இந்த விடயம் பார்க்கப்படுகின்றது என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.



மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கமானது சிங்கள மக்களுக்கு ஒரு சட்டம், தமிழ் மக்களுக்கு ஒரு சட்டம் என்ற அடிப்படையில் செயற்படுகின்றது. ஜே.வி.பியினர் இறந்த தங்களுடைய போராளிகளை நினைவுகூறுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருக்கின்றது, ஆனால் தமிழ் மக்களுக்கு அதற்கான சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை என்றால் இனவாத அடிப்படையில் இந்த விடயம் பார்க்கப்படுகின்றது. மக்கள் தங்களுடைய இல்லங்களில் இதனை அனுஷ் டிப்பதை அரசு தடுக்க முடியாது. கடந்த நல்லாட்சிக் காலத்தில் நாங்கள் பகிரங்கமாக மாவீரர் தினத்தையும் அன்னை பூபதியின் நினைவு தினத்தையும் தியாகி தலீபனின் நினைவு தினத்தையும் அனுஷ்டித்தோம்.

இப்போது அவர்கள் அதனை தடுத்து மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துகின்ற படியால் மக்கள் தங்கள் வாழிடங்களில் இந்நிகழ்வை அனுஷ்டிப்பதற்குரிய ஒழுங்கை செய்வார்கள். அதனை நிரந்தர மாக அவர்களால் தடுக்க முடியாது. சில ஆண்டுகளுக்கு அவர் களால் தொல்லை கொடுக்க முடியும். மீண்டும் அதனை அனுஷ்டிப்பதற்குரிய காலம் கனிந்துவரும். அரச ஊழியர்கள் சுமையாக இருக்கின்றார்கள் என்றால் அளவுக்கதிகமாக பாதுகாப்புப் படைகளை நியமனம் செய்துள்ள படியால் அவர்களுக்கு அதிக செலவினங்களை செய்யவேண்டியிருக்கின்றது. அந்த பாதுகாப்பு செலவீனம் விரலுக்கு மிஞ்சிய வீக்கமாக இருக்கின்ற படியால் அது உண்மையில் அரசுக்கு சுமையாக இருக்கின்றது. 126 கோடி மக்கள் உள்ள இந்தியாவிற்கு 13 இலட்சம் படைவீரர்களே இருக்கின்றார்கள். அவர்கள் சீனா, பாகிஸ்தானிற்கு எதிராக எல்லைப்போரும் செய் கின்றார்கள். ஆனால் 2 கோடி 20 லட்சம் வாழ்கின்ற எமது நாட் டில் ஒரு லட்சத்தையும் கடந்து 2 லட்சம் வரை படைகள் இருப்ப தென்பது இதுவே அரசிற்கு உள்ள பெரிய சுமை. இதனால் தான் அரசிற்கு அதிக செலவு ஏற்படுகின்றது. யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் இந்த பாதுகாப்புச் செலவினங்களை குறைப்பதன் மூலமாக மக்களுக்குரிய, விவசாயிகளுக்கு உரிய நிவாரணத்தை கொடுப்பதற்கும் அடி மட்ட மக்களை வாழ்விப்பதற்கு உரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டும். விவசாய குடும்பத்தில் பிறந்தவர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் கஷ்டங்களை நாங்கள் விளங்கியிருக்கின்றோம். கடந்த காலத்தில் வடக்கு கிழக்கு என பிரதேசவாதம் செய்தவர்கள் இன்று விவசாயிகளையும் இரண்டாக பிரிக்கப் பார்க்கின்றார்கள். விவசாயம் பாதிக்கப்படும் போது அனைத்து விவசாயிகளும் பாதிக்கப்படுவார்கள்.

இந்த அரசாங்கம் மக்கள் மத்தியில் பாரிய கசப்புணர்வினை ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கத்திற்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த அரசாங்கத்தினை சிங்கள மக்களே வெறுக்கும் நிலையில் இங்குள்ள சிலர் தொங்கிக்கொண்டிருப்பதற்கு இந்த அரசாங்கம் தேவைப்படுகின்றது. அரசாங்கம் மாற்றப்படுமானால் இவர்களின் தலைவிதியும் மாற்றப்படும் என்று அச்சம் கொண்டு சிங்கள மக்களைவிட அரசாங்கத்தில் ஒட்டிக் கொண் டிருக்கும் தமிழ் பிரதிநிதிகள்தான் அரசாங்கத்தினை தக்கவைத்துக்கொள்ளவேண்டும் என்பதற் காக பொருத்தமற்ற கருத்துக் களை மக்கள் மத்தியில் விதைத்து வருகின்றனர் என்றார்.

# நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது ரி-20 போட்டி வென்ற இந்திய அணி தொடரையும் கைப்பற்றியது



இந்தியா- நியூசிலாந்து அணிகளுக் கிடையிலான இரண்டாவது ரி-20 கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெற்ற இந்திய அணி, 3 போட்டிகள் கொண்ட தொடரை ஒரு போட்டி மீதமிருக்கும் நிலையிலேயே கைப்பற்றி யுள்ளது.

ராஞ்சியில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி, முதலில் துடுப்பெடுத்தாடுமாறு நியூசிலாந்து அணியை அழைத்தது. நியூசிலாந்து அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 153 ஓட்டங்களைச் சேர்த்தது. கிளென் பிலிப்ஸ் அதிகபட்சமாக 34 ஓட்டங்களையும், டரில் மிட்ச்செல் 31 ஓட்டங்களையும் எடுத்தனர். இந்திய அணியின் அறிமுக வீரர் ஹர்சல் பட்டேல் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

அடுத்ததாக, 154 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி, 17.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி பெற்றது. கேல்.எல். ராகுல் 65 ஓட்டங்களையும் ரோகித் சர்மா 55 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இந்தப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக இந்திய அணியின் அறிமுக வீரர் ஹர்சல் பட்டேல் தெரிவானார்.

3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரின் முதலிரு போட்டிகளையும் வென்றுள்ள இந்திய அணி தொடரைக் கைப்பற்றி 2-0 என முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக் குமிடையிலான இந்தத் தொடரின் மூன்றாவது ரி-20 போட்டி நாளை கொல்கத்தாவில் நடைபெற வுள்ளது.

# பங்களாதேஷ் அணியுடனான ரி–20 தொடர் முதலாவது போட்டியில் பாகிஸ்தான் வெற்றி



பாகிஸ்தான் அணி பங்களாதேஷில் சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட் மற்றும் 3 ரி-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடிவருகிறது.

இரு அணிகளுக்குமிடையிலான முதல் ரி-20 போட்டி நேற்று டாக்காவில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி, முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது. அபிப் ஹொசைன் 36 , மெஹிதி ஹசன் 30 ஓட்டங்களை எடுத்தனர். பாகிஸ்தான் அணியின் ஹசன் அலி 3 விக்கெட்டுக்களையும், மொகமட் வசீம் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதையடுத்து, களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 19.2 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றிபெற்றது. பகர் சமானும் குஸ்டில் ஷாவும் தலா 34 ஓட்டங்களை எடுத்தனர். சதாப் கான் ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களைச் சேர்த்து வெற்றியை உறுதிப்படுத்தினார். பங்களாதேஷ் அணியின் தஸ்கின் அஹமட் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இந்தப் போட்டியின் நாயகனாக பாகிஸ்தான் அணியின் ஹசன் அலி தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ரி-20 போட்டி இன்று நடைபெறவுள்ளது.

# உலக பெண்கள் டென்னிஸ் இரட்டையர் பிரிவு கிரெஜ்சிகோவா–கத்ரினா இணைக்கு வெற்றி



மெக்சிக்கோவில் நடைபெற்ற உலக பெண்கள் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டித் தொடரின் இரட்டையர் பிரிவு இறுதிப்போட்டியில், செக்குடியரசின் பார் போரா கிரெஜ்சிகோவா–கத்ரினா சினியகோவா இணை 6-3, 6-4 என்ற நேர் செட்டில் வெய்ஸ் சீக் – எலிசி மெர்டென்ஸ் ஜோடியை வீழ்த்தி முதல்முறையாக சம்பியன் பட்டத்தை வென்றது.

# மெக்சிக்கோ உலக பெண்கள் டென்னிஸ் தொடர் ஸ்பெயின் வீராங்கனை முகுருஜா சம்பியன்

உலகின் முதல் நிலை 8 வீராங்கனைகள் பங்கேற்ற டபிள்யூ.டி.ஏ. பைனல்ஸ் எனப்படும் உலக பெண்கள் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி மெக்சிக்கோவில் உள்ள குவாடலஜரா நகரில் நடைபெற்று முடிந்துள்ளது. இந்தத் தொடரில் ஸ்பெயினின் கார்பின் முகுருஜா சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக்கொண்டுள்ளார்.

இறுதியாட்டத்தில் 2 கிராண்ட்ஸ்லாம் வென்றவரும் முன்னாள் முதல் நிலை வீராங்கனையுமான ஸ்பெயினின் கார்பின் முகுருஜா, 8 ஆம் நிலை வீராங்கனையான எஸ்தோனியா நாட்டின் அனெட் கோன்டாவெய்ட்டை எதிர்கொண்டார்.

1 மணித்தியாலம் 38 நிமிடங்கள் வரை நடந்த இந்த போட்டியில் முகுருஜா 6-3, 7-5 என்ற நேர்செட்டில் கோன்டாவெய்ட்டை சாய்த்து சம்பியன் பட்டத்தை வசப்படுத்தினார்.

இதன் மூலம் 49 ஆண்டு கால பெண்கள் டென்னிஸ் சம்பியன்ஷிப்பில் வரலாற்றில் மகுடம் சூடிய முதல் ஸ்பெயின் வீராங்கனை என்ற பெருமையை அவர் பெற்றார். ஒட்டுமொத்தத்தில் இது அவரது 10 ஆவது சர்வதேசப் பட்டமாகும்.

வெற்றிக்குப் பின்னரான ஊடகச் சந்திப்பில், 'என்னால் சிறப்பாக செயல்பட முடியும் என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபித்திருப்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த வெற்றியின் மூலம் தரவரிசையில் நல்ல நிலைக்கு வந்திருக்கிறேன்' என்றார்.

இந்த இறுதிப்போட்டி வெற்றியின் மூலம் முகுருஜா தரவரிசையில் 5 ஆவது இடத்தில் இருந்து 3 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. உலக பெண்கள் தரவரிசையில் ஆஸ்திரேலியாவின் ஆஷ்லெ பார்ட்டி முதலிடத்திலும், பெலாரஸ் நாட்டவரான சபலென்கா இரண்டாவது இடத்திலும், செக்குடியரசின் கரோலினா பிளிஸ்கோவா நான்காவது இடத்திலும் தொடர்கின்றனர். கோன்டாவெய்ட் ஒரு இடம் ஏற்றம் கண்டு 7 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.



# தீர்க்கதரிசி தோழர் நாபாவின் ஜனன தினத்தில் தமிழின விடுதலைக்காய் ஐக்கியப்படுவோம்!

## ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் அழைப்பு

தமிழ் மக்களின் விடுதலையை வென்றெடுத்தல்என்றபொதுப்புள்ளியில் இதய சுத்தியுடன் அனைத்துத் தரப்பினரும் ஐக்கியப்பட வேண்டும் என்ற தீர்க்க தரிசனத்தினைக் கொண்டிருந்த தோழர் நாபாவின் ஜனன தினத்தில் தமிழ்த் தேசியத்தில் உள்ள அனைத்து சக்திகளும் இலக்கை அடைவதற்காக ஐக்கியப்படுவோம் என்று ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் அழைப்பு விடுத்துள்ளார்.



ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் ஆரம்பகர்த்தாவும், விடுதலைப்போராட்ட முன்னோடிகளில் ஒருவருமான தோழர் பத்மநாபாவின் 70 ஆவது ஜனன தினம் நேற்றாகும். அதனை முன்னிட்டு விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் –

தமிழின விடுதலைக்காக போராடிய முன்னோடிகளில் ஒருவரான தோழர் பத்மநாபா சமவுடைமையில் நின்று சிந்தித்த சிறந்தவொரு தீர்க்கதரிசியாவார். பத்மநாபாவும் எமது கட்சியும் ஆயுத விடுதலையை முழுமையாக நம்பியிருந்த காலத்திலேயே, தமிழனத்தின் இருப்பு, எதிர்காலம் உள்ளிட்டவற்றிலும் தீவிரமான கரிசனையைக் கொண்டிருந்தது.

அதுமட்டுமன்றி வெளிவேறு பாதைகளில் பயணித்தாலும் அனைத்து ஆயுத இயக்கங்களும் ஒரேபொது இலக்கைக் கொண்டிருக்கின்றன என்ற புரிதலைக் கொண்டிருந்த அவர், ஆயுத இயக்கங்களை ஒருங்கிணைத்து ஈழத்தேசிய விடுதலைமுன்னணிஎன்றகட்டமைப்பை ஸ்தாபிப்பதற்காக உழைத்தார்.

ஆயுத ரீதியில் போராடினாலும், இலக்கு ஒன்றாக இருக்கையில் இனத்துக்கான ஐக்கியத்துடன், ஒருங்கிணைந்து ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்என்பதில்தீவிரமானநிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். அதற்கு செயல் வடிவமும் கொடுத்திருந்தார்.

பின்னர், இலங்கை, இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திட்டபோது, ஆயுத ரீதியான விடுதலைப் போராட்டத்தைக் கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்திருந்தார். அப்போது, அன்றைய காலகட்டத்தில் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக இலங்கை அரசமைப்பில் 13ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டு மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன.

அவற்றைத் தமிழ் மக்களின் அபிலாஷைகளை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியாது விட்டாலும் அவற்றை வென்றெடுப்பதற்கான ஆரம்பப் புள்ளியாக அமைந்திருக்கின்றது என்பதில் உறுதியாக இருந்தார். அதனை உரக்க கூறினார். தமிழர் தாயகத்தை மையப்படுத்தி இணைந்த வடக்கு, கிழக்கு மாகாண சபையொன்றை வலுவான கட்டமைப்பாக செயற்படுத்த வேண்டும் என்பதிலும் அதீத ஆர்வம் காட்டினார்.

துரதிஷ்டவசமாக தமிழ்த்தலைவர்கள் அன்றைய காலகட்டத்தில் தோழர் நபாவின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. அவரது கருத்துக்களை நிராகரித்ததுடன் நிற்காது மாகாண சபைக்கட்டமைப்பைமலினப்படுத்துவதற்கான அனைத்து விதமான செயற்பாடுகளையும் முன்னெடுத்தார்கள்.

தற்போது 34 ஆண்டுகள் கழிந்துவிட்டன. கடந்தகாலத்தை ஒருதடவை மீட்டிப்பார்க்கையில் 13 ஆவது திருத்தச்சட்டத்தைக் கூட முழுமையாக நடைமுறைப்படுத்திப் பெறமுடியாததொரு தள்ளாட்டமான நிலைமையில் தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இருக்கின்றார்கள்.

அது மட்டுமன்றி, கடந்த காலத் தில் நடந்தேறிய அத்தனை அழிவுகளுக்கும் நீதி, நியாயம், பொறுப்புக்கூறல் என்பது கூட சமுத்திரத்தில் கரைந்துவிட்ட உப்பையொத்த நிலைமையில் தான் தமிழ் மக்கள் இருக்கின்றார்கள்.

அதனால், அபிலாஷைகளும் இல்லை பொறுப்புக்கூறலும் இல்லை என்ற 'அநாதரவான' நிலையில் தான் தமிழினமே இருக்கின்றது. இந்தக் காலத்தில் 13 ஆவது திருத்தச்சட்டத்தை மீளவும் முழுமையாக அமுலாக்க வேண்டும் என்பதற்காக கட்சிகள் ஒன்றிணைந்து முயற்சியைக் கையிலெடுத்துள்ளன.

இருப்பினும், அதற்கும், சில 'தமிழ் தலைமைகள்' முட்டுக்கட்டைகளைத் திரைமறைவில் போடும் நிலைமையே நீடிக்கின்றது. இப்போது 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதே சாத்தியமற்றதாகியுள்ளது.

தமிழர்களின் சார்பில் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட இந்தியா கூட அதனை வலியுறுத்துவதற்கான தனது தார்மீகக் கடமையை நிறைவேற்றமுடியாதவொரு இராஜதந்திர மூலோபயச் சிக்கலில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றது.

இந்நிலையில், ஆகக்குறைந்தது, தோழர் நாபா தனது இளம் வயதில் கூறிய தீர்க்கதரிசன வார்த்தைகளை மீள நினைவுபடுத்தி தமிழின விடுதலைக்காக பொதுப்புள்ளியில் அனைத்து தரப்பினரும் ஐக்கியப்படுவதே பொருத்தமானது.

அவருடைய ஜனன தினமான இன்று (நேற்று), அந்த ஒப்பற்ற சிந்தனையாளனின் நிலைப்பாடுகளை அரசியல் வேறுபாடு களுக்கு அப்பால் ஒருதடவை மீட்டி தீர்க்கமான தீர்மானம் எடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகின்றது. – என்றுள்ளது.

# திருட்டுச் சம்பவம் தொடர்பில் இராணுவ உயரதிகாரி கைது

பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை அறுத்துச் செல்ல முயற்சித்த இராணுவ உயர் அதிகாரி ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவிசாவளை பிரதான பஸ்தரிப்பிடத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுமார் ஒரு லட்சத்து முப்பதாயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி ஒன்றை அபகரித்துச் செல்ல முயற்சித்த போது இராணுவ சார்ஜன் மேஜர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தெஹியோவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியையே இவ்வாறு அறுத்துச் செல்ல இராணுவ அதிகாரி முயற்சித் துள்ளார்.

தங்கச் சங்கிலியை கொள்ளையிட முயற்சித்த காரணத்தால் அந்தப் பெண்ணின் கையில் இருந்த 10 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைபேசியும் சேதமடைந்துள்ளது.

எஹலியகொட பிரதேசத்தைச் சேர்ந்த இராணுவ உயர் அதிகாரி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# பளை பொலிஸ் நிலையத்தில் 5 நாளில் 11 பேருக்கு தொற்று

கிளிநொச்சி பளை பொலிஸ் நிலையத்தில் பொலிஸார் 11 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து நாள்களில் மேற்படி தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸாருடன் தொடர்பிலிருந்தவர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# குண்டு துளைக்காத கவச உடை இலங்கை மாணவியால் கண்டுபிடிப்பு!

## ஆஸ்திரேலியாவில் சாதனை

ஆஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் கல்விகற்றுவரும் இலங்கை மாணவி ஒருவர் உயர் தொழில்நுட்பத்திறன் கொண்ட குண்டு துளைக்காத கவச உடை ஒன்றைத் தயாரித்துள்ளார்.

சிட்னி பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டப்படிப்பை மேற்கொள்ளும் பிரபானி ரணவீர என்பவரே தனது பட்டப்படிப்பை நிறைவுசெய்ய மேற்கொள்ளவேண்டிய ஆராய்ச்சியின் பயனாக இதனைக் கண்டுபிடித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்ட சிங்கள ஊடகமொன்றுக்குக் கருத்து தெரிவித்த பிரபானி ரணவீர:–

உலகில் குண்டு துளைக்காத உடைகள் இன்று வரையில் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் அவற்றை அணிந்தவாறு தாக்குதல்களுக்கு முகங்கொடுக்கும்போது, உணரப்படும் அதிர்ச்சியை உடலால் தாங்க முடியாதமையால் உயிர்ச் சேதங்கள் ஏற்படுகின்றன.

அத்துடன், துப்பாக்கிச் சூட்டின்போது, ஏற்படும் கதிரியக்க செயற்பாடுகளால் உயிர்ச் சேதங்கள் ஏற்படாத போதிலும் அது பல பக்க விளைவுகளை ஏற்படுத்தும்.

எவ்வாறாயினும், மேம்படுத்தப்பட்ட, உயர் தொழில்நுட்பத்திறன் கொண்ட குண்டு துளைக்காத உடை, போர்க்களத்தில் ஏற்படும் உயிரிழப்பிலிருந்து பாதுகாக்கிறது என்பதைத் தனது



ஆராய்ச்சியில் மூலம் வெளிப்படுத்தியுள்ளேன் எனத் தெரிவித்துள்ளார். மேலும் புதிய வடிவமைப்பின் எடையை வெகுவாகக் குறைக்க உருக்கு தவிர, டைட்டானியம் மற்றும் அலுமினியம் ஆகிய மூன்று உலோகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார் இந்தக் கண்டுபிடிப்பு, தாக்குதலின் பின்ன ரான மன உளைச்சலை 80 சதவீதம் வரை குறைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாரதி அனுமதிப்பத்திர எழுத்துமூல பரீட்சை இனி பரீட்சைத் திணைக்கள மேற்பார்வையில்!

அடுத்த ஆண்டு முதல் சாரதி அனுமதிப்பத்திரத்தை பெறுவதற்கான எழுத்து மூல பரீட்சை, இலங்கை பரீட்சை திணைக்களத்தின் மேற்பார்வையில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார் என கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பிப்போர் தாம் வசிக்கும் பகுதியில், சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான எழுத்து மூலப் பரீட்சையில் கலந்துகொள்ளும் வாய்பைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தினசரி சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு, மிகவும் முன்கூட்டியே நாள் மற்றும் நேரத்தை ஒதுக்கிக்கொள்ளுமாறு மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

எவ்வாறாயினும். நாரஹேன்பிட்டி மற்றும் வேரஹெர அலுவலகங்களின் ஊடாக சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக திகதி மற்றும் நேரத்தை முன்பதிவுசெய்ய, இதற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த 0112 677 877 என்ற தொலைபேசி இலக்கம் தற்போது பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.11.2021இல் வெளியிடப்பெற்றது.